**ராஜாங்கன பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2019 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஜுன் 14 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 14 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ராஜாங்கன பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கியல் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பெகோ லோடர் இயந்திரத்தினதும் தண்ணீர் பவுஸர் லொறியினதும் (Water Tank Truck) பெறுமதியான ரூபா 27,433,434 நிதி அறிக்கைகளில் ரூபா 25,879,253 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததனால் ரூபா 1,554,181 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | கழிவகற்றல் கட்டட நிர்மாண வேலைகள் பெறுமதியான ரூபா 4,867,675 நிதி அறிக்கைகளில் ரூபா 4,602,913 ஆக | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 264,762 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | நீதிமன்ற தண்டப் பண வருமானம் ரூபா 2,834,663 பெறுமதியானது நிதி அறிக்கைகளில் ரூபா 3,564,664 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 730,001 அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானம் சரியாகக் கண்டறியப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (iv) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்துக்கான முன்னேற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு கட்டணத்துக்கான முன்னேற்பாடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (v) | மீளாய்வாண்டின் ரூபா 930,000 பெறுமதியான முத்திரை வரிகள் கணக்கிடப்பட்டிருக்காததோடு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையாக காலப்பகுதிக்காக திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டிய ரூபா 1,257,697 முத்திரை வரி வருமானம் நிதி அறிக்கைகளில் ரூபா 926,572 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததால் கூட்டுத் தொகை ரூபா 1,261,125 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**(ஆ) இணங்காத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட 05 வகைகளுக்குரிய 62 பொருட்கள் நிதி | சம்பந்தப்பட்ட மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கினைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கைகளில் சொத்துக்களின் கீழே காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | வேண்டும். | |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பதிவேடு களுக்கிணங்க வருமான வகைகள் 02 இனதும் நிலுவை வருமானக் கணக்கொன்றினதும் ரூபா 6,580,545 பெறுமதியானது நிதி அறிக்கைகளில் ரூபா 9,446,279 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததால் ரூபா 2,865,734 வேறுபாடு காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட மீதிகளில் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்கினைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**(இ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

-----------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 03 ஆண்டுகளுக்கும் மேலாக நிதி அறிக்கைகளில் நிலவி வரும் ரூபா 2,400,721 கிடைக்க வேண்டிய 08 கணக்குகளின் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மீதிகள் கண்டறியப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிடைக்க வேண்டிய இந்த 08 கணக்கு மீதிகளும் யாரிடமிருந்து அறவிடப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. |
| (ii) | பல ஆண்டுகளாக நிதி அறிக்கைகளில் நிலவி வரும் ரூபா 2,656,900 பெறுமதியான செலுத்த வேண்டிய 07 கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் கண்டறியப்பட்டு தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செலுத்த வேண்டிய இந்த 07 கணக்கு மீதிகளிடையே செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் மற்றும் செலுத்தப்படாத ஓய்வூதியங்களும் ஓய்வூதிய கொடுப்பனவுகளும் சம்பந்தமாக அதற்குரிய பிரிவில் விசாரணை செய்து அந்தப் பணத்தைச் செலுத்த நடவடிக்கை எடுத்திருப்பதைக் குறித்துக் கொண்டுள்ளதோடு, இச் செலவுகளில் கடன் வழங்குனர்கள், கேளிக்கை வரி, முற்பணத்துக்குரிய அதிகாரி, நானாவித வைப்புகள் மற்றும் தண்ணீர் வைப்புக்கள் ஆகியவற்றைச் செலுத்துவதற்குரிய |

பிரிவினரைக் கண்டறிய இயலவில்லை.

**(ஈ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 134,935,236 உடைய கணக்கு வகைகள் 09 இற்குரிய உரிமைச் சான்றிதழ்கள், வயது பகுப்பாய்வுகள், ஆய்வுக் குழு அறிக்கைகள் மற்றும் விரிவான உப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமான முறையில் சரி பார்க்க முடியவில்லை. | பெறுமதியை உறுதிப்படுத்தத் தேவையான எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் வழிகாட்டி | | | |
| (i) விதி 59 | பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வர்த்தகம் மற்றும் தொழில் வரி தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு செயலாளரிடம் கையளிக்கப்படவில்லை. | விதிக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். ஆய்வொன்றை மேற்கொண்டுள்ள போதிலும் வேறொரு ஆவணத்தைத் தயாரிக்கும் பணி நடைபெறவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டிற்காக வேறொரு ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) விதி 217 மற்றும் 218 | சபைக்குரிய காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக பி.ச.46 வடிவ பிரகாரம் ஆவணமொன்று பேணப்பட்டிருக்காததோடு அனைத்து காணிகளையும் கட்டடங்களையும் ஆண்டுக்கொரு தடவையேனும் பரிசோதித்துப் பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விதிக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டிலிருந்து அறிவுறுத்தல்களுக்கிணங்க செயல்படுகிறேன். |
| (ஆ) | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை<br>--------------------- | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 திகதிய்; 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குரிய 13 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிதல் சோதனை நடத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளுக் கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல் கள் அமைச்சின் செயலாளரின் 2009 ஜுன் 17 திகதிய 09/2009(I) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபையின் மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை தின ஊதியக் கொடுப்பனவுகளை வழங்கும்போது கைரேகை அடையாள உபகரணத்துக்கிணங்க மணித்தியாலங்கள் கணக்கிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனினும் அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளுக் கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. இனி வரும் காலத்தில் செயற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க குறித்துக் கொண்டிருக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,296,376 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,779,625 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப˙பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப˙பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,409,400 | 1,558,592 | 1,558,592 | - | 868,000 | 1,221,637 | 1,221,637 | - |
| (ii) | வாடகை | 3,648,200 | 7,272,191 | 7,190,991 | 120,750 | 4,049,000 | 5,397,395 | 5,357,845 | 39,550 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 966,100 | 144,480 | 144,480 | 220,425 | 140,000 | 177,935 | - | 220,425 |
| (iv) | ஏனைய வருமானம் | 26,245,874 | 20,268,346 | 31,831,684 | 4,251,309 | 23,763,280 | 29,144,214 | 13,329,567 | 15,814,647 |
| | மொத்தம் | 33,269,574 | 29,243,609 | 40,725,747 | 4,592,484 | 28,820,280 | 35,941,182 | 19,909,049 | 16,074,622 |

### 2.2.2 வீத வரிகள் மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இலக்கம் 15 உடைய பிரதேச சபை சட்டத்தின் 134 (i) பிரிவின் பிரகாரம் சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் மேம்படுத்தப்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து வீதவரிகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது வீத வரிகளையும் வரிகளையும் விதிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பண வருமானம் ரூபா 3,324,736 ஆகக் காணப்பட்டது. | நீதிமன்ற தண்டப் பண வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய முத்திரை வரி வருமானம் ரூபா 2,341,550 ஆகக் காணப்பட்டது. | வுரி வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது முத்திரைக் கட்டண மீதிகளைத் தீர்த்துக் கொண்டிருப்பதோடு இன்னும் அறவிடப்பட வேண்டியிருப்பது ரூபா 1,587,500 மாத்திரம் ஆகும். இந்தத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப | சட்டத்துக்கிணங்க துணை விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டும். | துணை விதிகள் 10 விதிக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய துணை விதிகளை எதிர்வரும் காலத்தில் விதிக்க |

| | | |
|---|---|---|
| விதிகள் பிறப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

---------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் அடைய வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் குறித்து அறிந்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சம்பந்தமான நிகழ்ச்சி நிரல் 2030 குறித்து தற்போது ஆராய்ந்து வருகிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 376,590,580 பெறுமதியுடைய 99 குறிப்பேடுகள் குறித்து எவ்வித ஒப்புதலையும் பெற்றுக் கொள்ளாது கணக்கிடப்பட்டிருந்ததோடு அவ்வாறு கணக்கிடும் செயலைக் குறித்து அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் எவரும் முறையான மேற்பார்வை செய்திருக்கவில்லை. | முறையான மேற்பார்வையின் கீழ் குறிப்பேடுகளுக்கு ஒப்புதல் பெறப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிலிருந்து சரி செய்து மேற்பார்வையிட குறித்துக் கொண்டிருக்கிறேன். |
| (ஆ) | பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து சபையினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 1,248,383 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்பப்பட வேண்டும். | இந்த மீதியைக் கண்டறிய முடியாமல் இருப்பதால் உள்ளூராட்சித் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க பொருத்தமான நடவடிக்கையை எடுக்கவிருக்கிறேன். |

### 3.3. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபையின் ஊழியர் பதவி வெற்றிடங்கள் 8 காணப்பட்டதோடு மேலதிக பதவி 01 உம் காணப்பட்டது. | ஊழியர் பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய உரிய பதவிகளுக்குத் தகுதியான ஊழியர்களை நியமித்து நிறுவனத்தின் செயற்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளரிடமும் அரச சேவைகள் ஆணைக்குழுவிடமும் விபரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. |
| (ஆ) | இடம் மாற்றப்பட்டுச் சென்ற ஊழியர்கள் 05 பேரிடமிருந்தும், மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர்கள் 05 பேரிடமிருந்தும், பணி இடை நிறுத்தப்பட்ட ஊழியர்கள் 03 பேரிடமிருந்தும் இன்னும் வேறு ஊழியர்கள் இருவரிடமிருந்தும் ரூபா 973,017 கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. | கடன் தொகையை அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இட மாற்றம் சென்றவர்களிடமிருந்து மாதாந்தம் கடன் அறவிடப்படுவதோடு ஏனையவர்களின் மீதி பல ஆண்டுகளாகத் திகழ்ந்து வருவதோடு சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினூடாக அத் தொகையை நீக்கி விட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 கையேற்காத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபை பயன்படுத்திக் | சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட | 2019 ஆம் ஆண்டில் கையேற்க நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டிருந்த ரூபா 8,910,000 பெறுமதியுடைய 4 வாகனங்களை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபையினால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த 56 காணிகளை கையேற்க கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தாக்கப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது பிரதேச செயலாளரிடம் கையேற்க தேவையான கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. |

### 3.4.2 விளைவற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆண்டில் சபைக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 2,655,318 பெறுமதியான ∴போடோன் ரக ட்ரக்டர் வண்டி சில வருடங்களாக உபயோகிக்கப்படாது சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | தேவையான பழுது பார்த்தல்கள் செய்யப்பட்டு அந்தச் சொத்துக்கள் அதிக பட்ச செயற்திறனோடு திறம்பட பாவிக்கப்பட வேண்டும். | உதிரிப் பாகங்கள் இல்லாத காரணத்தால் இவ்வளவு காலமும் பழுது பார்க்க முடியவில்லை. 2019 ஆம் ஆண்டில் பழுது பார்த்து பாவனைக்கு எடுக்க எதிர்பார்த்திருக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலக்கம் 53-5052 உடைய மிட்சுபிஷி கெப் ரக வாகனம் செயலற்றுக் காணப்பட்டதோடு இந்த வாகனத்தைப் பழுது பார்த்து பாவனைக்கெடுக்க அல்லது 2015 ஜூலை 10 திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் அகற்றுவதற்கு இனி வரும் காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |